இணைந்த சேவைச் சுற்றறிக்கை : *05/2019*

எனது இலக்கம்: *PA/CS/POLICY/*சேவைப் பிரமாணக் குறிப்புத் திருத்தம்*(*பாகம் *II)*
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு
சுந்திர சதுக்கம்

கொழும்பு *07*.

*2019.10.23*

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

<u>அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் பதவிப் பெயரை மாற்றுதல்</u>

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் *2013.12.11* ஆந் திகதிய *1840/34* ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டு, *2017.08.16* ஆந் திகதிய *2032/26* ஆம் இலக்க மற்றும் *2018.01.04* ஆந் திகதிய *2052/26* ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகள் மூலம் திருத்தப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பதவிப் பெயர், அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கு இணங்க *2019.09.09* ஆந் திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் *2140/4* ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் திருத்தப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் "அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு" என்பதற்குப் பதிலாக முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு" எனப் பதிலீடு செய்யப்பட்டுள்ளது.

*02.* அதற்கிணங்க, *2019.09.09* ஆந் திகதி முதல் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அனைத்து உத்தியோகத்தர்களையும் "முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்" சேவைக்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்களாகக் கருதுமாறு பணிவுடன் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்./கே.வீ.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்